**நாள் 23.06.2023.**

**OS 214/2021 வா.சா 1 சாட்சி சரவணன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஒரு கூலித்தொழிலாளி. எனது சொந்தஊர் தில்லையாடி கிராமம். எனது மாமனார் பெயர் பக்கிரிசாமி. ஈச்சங்குடி கிராமம் சோமேஷ்வரபுரத்தில் தாவா சொத்து உள்ளது. தாவா சொத்திற்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 100 கி.மீ தூரம் இருக்கும். நான் குடியிருப்பது மற்றும் கூலித்தொழில் செய்வது தில்லையாடி கிராமத்தில்தான் என்றால் சரிதான். வழக்கு சொத்து பிரதிவாதி ஹேம்குமாருக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து ஹேம்குமாரின் அனுபவத்தில் முன்பு இருந்தது தற்சமயம் என் மாமனார் அனுபவத்தில் உள்ளது. 6 வருட காலமாக எனது மாமனார் குத்தகை பிரதிவாதிக்கு அளந்து வருகிறார். குத்தகைக்கு எழுத்துமூலமாக எதுவும் ஆவணம் எங்களுக்குள் ஏற்படவில்லை. தாவா சொத்தில் காய்கறி விவசாயம் செய்துவருகிறோம். கிராம நிர்வாக அலுவலர் தாவாஇடத்தை பார்வையிட்டு என்ன பயிர் என்று குறித்துகொண்டாரா என்றால் இல்லை. தாவா ஊருக்கு நான் மாதம் ஒருமுறை வருவேன். அதனால் கிராம நிர்வாக அலுவலர் வந்து போவது எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு 2010 ல் திருமணம் நடந்தது. எனது மாமனாருக்கு எனது மனைவியைத் தவிர மற்றொரு பெண்ணும் ஒரு மகனும் உள்ளார்கள். என் மனைவியின் சகோதரர் வெளிநாட்டில் வேலை பார்க்கின்றார். அவர் 8 வருடங்களாக வெளிநாட்டில் வேலை பார்க்கின்றார். என் மனைவியின் சகோதரி திருமணம் ஆகி திருவையாறில் இருந்து வருகிறார். அவருக்கு 2017 ல் திருமணம் நடந்தது. தாவா சொத்து உள்ள கிராமத்தில் எனது மாமனாரும், மாமியாரும் மட்டும் உள்ளனர். எனது மாமனார் வீட்டிற்கு அருகில் தாவா சொத்து உள்ளது. இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு நிலங்கள் அதே கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த மற்ற நிலங்களில் பிரதிவாதி என்ன பயிர் சாகுபடி செய்துவருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி தஞ்சாவூரில் குடியிருக்கிறார். பிரதிவாதியின் விலாசம் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் குடும்பத்தில் அவரது மனைவி மற்றும் மகன் தவிர வேறு யார் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா கிரய ஒப்பந்தம் போட்டுக்கொண்டது 30.03.2021 தேதியில் போட்டுக்கொண்டது. கிரயஒப்பந்தம் எத்தனை ரூபாய் தாளில் போட்டுக்கொண்டது என்று எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி தாவா சொத்து அமைந்துள்ள

கிராமத்திற்கு என்றைக்கு எல்லாம் வந்துபோவார் என்று எனக்கு தெரியாது. கிரய ஒப்பந்தம் ரூ.11,73,000/—த்திற்கு போட்டுக்கொண்டோம். பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.